www.tamilarangam.net

# வீர அஞ்சலி

## திரு.சதாசிவம்கிருஷ்ணகுமார்(தளபதிகிட்டு)

## முன்னாள் யாழ்மாவட்டத் தளபதி,சர்வதேசப்பொறுப்பாளர்



வல்வை மடியில்
02 . 01 . 1960

அலை மடியில்
16 . 01 . 1993

வல்வை மைந்தனே !
வான் சென்றாயோ........
பூமியை பிளந்த
புரட்சி பூவே
எங்கள் கிட்டண்ணா..........
வல்வை கண்டெடுத்த
வலம்புரி சங்கே
எங்கள் கிட்டப்பா............
தேசம் தேடுகிறது
உன்னை
தேசம் தேடுகிறது........
விடியலை தோற்றுவித்த
விடிவெள்ளி நீ..............
கனவுகளை கட்டிக் கொண்டு
கடலுக்குள் போனவரே...
வல்வை
அலைவந்து சொல்லுது
காவிய
கதை ஒன்று சொல்லுது.......

உரத்த குரலால் - சுதந்திர
உணர்ச்சியை
உசுப்பியவனே
விடுதலைப் பயணத்தில்
வீர வரலாறு நீ........
ஈழத்தின் தேடலில்
உன்
வீரச் சுவடுகள்
காவிய நாயகர்களை
மட்டுமல்ல
காலத்தையும் பிரசவிக்கும்
புது தேசத்தையும்
பிரசவிக்கும்.

*இவருடன் தேசத்தின் தேடலினில் வீரமரணமெய்திய*
*அனைத்து போராளிகளுக்கும் வல்வைத் தாயின்*
*வீர அஞ்சலிகள்.*

- வல்வைத் தாய் -
(லண்டன் வாழ் வல்வை மக்கள்)

Printed by VASAN LITHO PRINTER Tel 081 - 640 4366

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்